# வெற்றி வாழ்விற்காக



# முழங்கால் யுத்தம்

# முழங்கால் யுத்தம்

## பிரார்த்தனை நேரம்
## (வெற்றி வாழ்விற்காக)



**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபிரெயர் 11:1)**

---

தேவ ஊழியர் L. ஜோசப்

# உங்களோடு...

*விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (கலா 3:11)*

**நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் உன்னதமான நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.**

தேவகிருபையால் **முழங்கால் யுத்தம் – பிரார்த்தனை நேரம் (வெற்றி வாழ்விற்காக)** என்கிற இந்த விசுவாச ஜெபக்கையேட்டை வெளி யிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். நம் வாழ்வில் அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகள், தோல்விகள், பயங்கள் மற்றும் சோர்வுகளால் மிகவும் கலங்கிப் போகிறோம். மேலும், நம்மில் காணப்படும் பாவங்கள், சாபங்கள், குறைவுகள், சத்துருவின் தாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ள முடியாமல் தவிக் கிறோம். இதுபோன்ற சூழ்நிலையில் ஆபிரகாமைப் போல வாக்குத்தத்தங்களை விசுவாசத்தோடு அறிக்கையிட்டு ஜெயத்தைப் பெறவே இதனை ஆயத்தப்படுத்தியுள்ளோம்.

ஆபிரகாம் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை, தேவனுடைய வாக்குத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவரயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான் (ரோம 4:19-21) என்று வேதம் சொல்லுகிறது.

இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன் உங்கள் விசுவாச அறிக்கையை கனப்படுத்தி உங்கள் வாழ்வின் இக்கட்டான சூழ்நிலைகளையெல்லாம் உங்களுக்கு சாதகமாய் மாற்றுவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. விசுவாசத்தோடு தொடர்ந்து அறிக்கைசெய்தால் பிரச்சினைகளை மேற்கொண்டு ஜெயிப்பது உறுதி.

**இயேசுகிறிஸ்துதாமே உங்கள் விசுவாச அறிக்கையைக் கனப்படுத்தி அற்புதம் செய்வாராக. ஆமென்.**

அன்பும் ஜெபமும்...

தேவஊழியர்
L. ஜோசப்

# இக்கையேட்டின் உள்ளே...


I. தேவனை ஸ்தோத்திரிப்போம் ...06

2. விசுவாச அறிக்கைகள்

1. அவிசுவாசத்தை மேற்கொள்ளுங்கள் ... 08

2. பிரச்சினையை மேற்கொள்ளுங்கள் ... 10

3. பாவத்தை மேற்கொள்ளுங்கள் ... 12

4. சாபத்தை மேற்கொள்ளுங்கள் ... 14

5. கோபத்தை மேற்கொள்ளுங்கள் ... 16

6. இச்சையை மேற்கொள்ளுங்கள் ... 18

7. பெருமையை மேற்கொள்ளுங்கள் ... 20

8. தாழ்வுமனப்பான்மையை மேற்கொள்ளுங்கள்.. 22

9. அடிமைத்தனத்தை மேற்கொள்ளுங்கள் ... 24

10. சத்துருவை மேற்கொள்ளுங்கள் ... 26

11. தோல்வியை மேற்கொள்ளுங்கள் ... 28

12. பயத்தை மேற்கொள்ளுங்கள் ... 30

13. கவலையை மேற்கொள்ளுங்கள் ... 32

14. சோர்வை மேற்கொள்ளுங்கள் ... 34

15. துக்கத்தை மேற்கொள்ளுங்கள் ... 36

16. கலக்கத்தை மேற்கொள்ளுங்கள் ... 38

17. பெலவீனத்தை மேற்கொள்ளுங்கள் ... 40

18. வியாதியை மேற்கொள்ளுங்கள் ... 42

19. ஆபத்தை மேற்கொள்ளுங்கள் ... 44

20. குறைவை மேற்கொள்ளுங்கள் ... 46

**3. விசுவாச வசனங்கள் ... 48**



# தேவனை ஸ்தோத்திரிப்போம்

*ஸ்தோத்திர பலியிடுகிறவன் என்னை மகிமைப் படுத்துகிறான் (சங் 50:23)*

★ பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே!

★ தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே!

★ பரிசுத்த தேவ ஆவியானவரே!

★ மரணத்தை ஜெயமாக விழுங்கினவரே!

★ திடநம்பிக்கையைத் தருகிறவரே!

★ மிகுந்த தைரியத்தைத் தருகிறவரே!

★ தோல்வியை ஜெயமாக மாற்றுகிறவரே!

★ தழும்புகளால் குணமாக்குகிறவரே!

★ துக்கத்தை சந்தோஷமாக்குகிறவரே!

★ பெலவீனத்தில் பெலன் தருகிறவரே!

★ மிகுந்த சந்தோஷத்தைத் தருகிறவரே!

★ பாவத்திலிருந்து விடுவிக்கிறவரே!

★ ஆபத்தில் அனுகூலமான துணையானவரே!

★ சூழ்நிலையை சாதகமாக்குகிறவரே!

★ விசுவாசத்தைத் துவக்குகிறவரே!

★ விசுவாசத்தை முடிக்கிறவரே!

★ விசுவாசத்தை பெருகச் செய்கிறவரே!

★ சாத்தானைத் தோற்கடித்தவரே!

★ சாத்தானை ஜெயித்தவரே!

★ பிசாசின் கிரியைகளை அழித்தவரே!

★ குறைவை நிறைவாக்குகிறவரே!

★ பெலவீனங்களை மாற்றுகிறவரே!

★ மிகுந்த தைரியத்தைத் தருகிறவரே!

★ கவலையில் ஆறுதல் தருகிறவரே!

★ அடிமைத்தனத்தை முறிக்கிறவரே!

★ பிரச்சினைகளிலிருந்து விடுப்பவரே!

★ நல்ஆலோசனை தருகிறவரே!

**இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது (சங் 113:2)**

# 1. அவிசுவாசத்தை மேற்கொள்ளுங்கள்

*விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்*
*(கலா 3:11)*

- ★ என்னுடைய விசுவாசமே இந்த உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவா 5:4)
- ★ நான் விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறேன் (எபே 6:16)
- ★ நான் விசுவாசமென்னும் மார்க்கவசத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறேன் (1தெச 5:8)
- ★ நான் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் பட்டிருக்கிறேன் (ரோம 5:1)
- ★ என்னுடைய விசவாசம் தேவனுடைய பெலத்தில் இருக்கிறது (1கொரி 2:4)
- ★ விசுவாசத்தினால் கிறிஸ்து என் இருதயத்தில் வாசமாயிருக்கிறார் (எபே 2:17)
- ★ இயேசுவின் மேலுள்ள விசுவாசமே என்னை இரட்சிக்கும் (மத் 9:22)

★ என் விசுவாசம் பெரிது; நான் விரும்புகிறபடி எனக்கு ஆகும் (மத் 15:28)

★ விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிற வருமாயிருக்கிற இயேசுவை நோக்கி பொறுமை யோடே ஓடுவேன் (எபி 12:1)

★ நான் விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத் தோடே அதிலே பெருகுவேன் (கொலோ 2:7)

★ மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் என்னை உறுதிப்படுத்திக்கொள்வேன் (யூதா 1:20)

★ இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால் எனக்குத் தைரியமும், திடநம்பிக்கையும் உண்டாயிருக் கிறது (எபே 3:12)

★ நான் விசுவாசித்திருக்கிற இயேசுகிறிஸ்து என்னைக் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் (2தீமோ 1:12)

**ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி**
**உதவி செய்யும் (மாற் 9:24)**

# உ. பிரச்சினையை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்*

*(யாத் 14:14)*

★ நான் என்னில் அன்புகூருகிற இயேசுவாலே எல்லாப் பிரச்சினைகளிலும் ஜெயங்கொள்ளு கிறவனாயிருக்கிறேன் (ரோம 8:17)

★ என்னைப் பெலப்படுத்துகிற இயேசுகிறிஸ்து வினாலே நான் எல்லாப் பிரச்சினையையும் மேற்கொள்ளுகிறவனாயிருக்கிறேன் (பிலி 4:13)

★ கிறிஸ்துஇயேசுவுக்குள் எப்பொழுதும் நான் ஜெய மெடுக்கிறவனாயிருக்கிறேன் (2கொரி 2:14)

★ இயேசுகிறிஸ்துவாகிய ஆண்டவர் எல்லாப் பிரச்சினைகளிலிருந்தும் விடுவிக்க எனக்குத் துணைசெய்கிறவராயிருக்கிறார் (ஏசா 50:7)

★ எனக்கு விரோதமாய் கூடுகிறவர்கள் என் பட்சத்தில் வருவார்கள் (ஏசா 54:15)

★ இயேசுகிறிஸ்து என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் ஒருபோதும் அசைக்கப்படுவதில்லை (சங் 16:8)

★ பிரச்சினைகளை நீக்கிப்போடுகிற இயேசுகிறிஸ்து எனக்கு முன்பாகப் போகிறார் (மீகா 2:13)

★ இயேசுகிறிஸ்து எனக்கு முன்னே போய் கோணலானவைகளைச் செவ்வையாக்குவார் (ஏசா 45:2)

★ எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம் (ஏசா 54:17)

★ வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுகிறிஸ்துவிடமிருந்து எனக்கு ஒத்தாசை வரும் (சங் 121:2)

★ உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலிருக்கிற இயேசுகிறிஸ்து பெரியவர்; ஆதலால், பிரச்சினைகள் என்னை மேற்கொள்ளாது (1யோவா 4:4)

**பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை**

**(மத் 16:18)**

# 3. பாவத்தை மேற்கொள்ளுங்கள்

*நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் (1பேது 1:16)*

★ இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்னுடைய சகல பாவங்களையும் நீக்கி என்னைச் சுத்திகரிக்கும் (1யோவா 1:7)

★ இயேசுவே என்னைப் பரிசுத்தமாக்குகிறவர் (லேவி 21:15)

★ இயேசுகிறிஸ்து என்னை அசுத்தத்திற்கல்ல; பரிசுத்தமாய் வாழவே அழைத்திருக்கிறார் (1தெச 4:7)

★ இயேசுகிறிஸ்துவினிடத்தில் பாவமில்லை; அவரில் நிலைத்திருக்கிற நானும் இனி பாவஞ் செய்வதில்லை (1யோவா 3:5,6)

★ இயேசு என்னைப் பாவமாற சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1யோவா 1:9)

★ நான் பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி என் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுத்திருக்கிறேன் (ரோம 6:19)

★ இயேசுவால் பிறந்த நான் பாவஞ்செய்யேன். ஏனெனில், அவருடைய வசனம் எனக்குள் தரித்திருக்கிறது (1யோவா 3:9)

★ நான் ஆவிக்கேற்றபடி நடந்து மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பேன் (கலா 5:16)

★ நான் பரிசுத்தமாக்கப்பட்ட கனத்துக்குரிய பாத்திரம் (2தீமோ 2:21)

★ நான் என் சரீரத்தைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்திருக் கிறேன் (ரோம 12:1)

★ நான் என் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளுவேன் (1தெச 4:5)

★ நான் தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால் பாவம் என்னை மேற்கொள்ளமாட்டாது (ரோம 6:14)

**நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்**

**(லேவி 22:32)**

# 4. சாபத்தை மேற்கொள்ளுங்கள்

*இனி ஒரு சாபமும் இராது*
*(வெளி 23:3)*

- ★ இயேசுவே எனக்குப் பரிகாரியாக இருக்கிறார் (யாத் 15:26)
- ★ இயேசு எனக்காக சிலுவையில் பலியாகி சாபத்திலிருந்து என்னை மீட்டுக்கொண்டார் (யோவா 8:36)
- ★ நான் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறேன் (1பேது 1:19)
- ★ இயேசுகிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே என்னை சம்பாதித்திருக்கிறார் (அப் 20:28)
- ★ இயேசுகிறிஸ்து என்மேல் அன்புகூர்ந்தபடியினால், சாபத்தை எனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணி யிருக்கிறார் (உபா 23:5)
- ★ நான் கிறிஸ்துவுக்குள் இருப்பதால் என் வாழ்வின் சாபங்கள் யாவும் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின (2கொரி 5:17)

★ நான் கிறிஸ்துவினுடையவனாகவும், அவரின் சுதந்தரனாயும் இருக்கிறேன் (கலா 3:29)

★ எனக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் தண்டனையை இயேசுகிறிஸ்து ஏற்றுக்கொண்டதால் என் சாபம் நீங்கிவிட்டது (ஏசா 53:5)

★ இயேசுகிறிஸ்துவின் ஆவியானவர் என்னில் இருப்பதால் நான் சாபத்திலிருந்து விடுவிக்கப் பட்டிருக்கிறேன் (2கொரி 3:17)

★ நான் இயேசுகிறிஸ்துவினாலே பெற்ற அபிஷேகத்தினால் என் சாபங்கள் முறிந்துபோகிறது (ஏசா 10:27)

★ என்னுடைய வாசஸ்தலத்தையோ இயேசுகிறிஸ்து ஆசீர்வதிக்கிறார் (நீதி 3:33)

**மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் (கலா 3:13)**

# 5. கோபத்தை மேற்கொள்ளுங்கள்

*மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே (யாக் 1:20)*

- ★ நான் என்னில் அன்புகூருகிற இயேசுகிறிஸ்துவாலே எனக்குள்ளிருந்து எழும்புகிற கோபத்தை மேற்கொள்வேன் (ரோம 8:17)
- ★ இயேசுவானவர் தம்மைத்தாமே தாழ்த்தினதைப் போல நானும் என்னைத் தாழ்த்துவேன் (பிலி 2:8)
- ★ கிறிஸ்துவுக்குள் தேவன் என்னை மன்னித்தது போல நானும் மற்றவர்களை மன்னிப்பேன் (எபே 4:32)
- ★ நான் மனத்தாழ்மையினாலே மற்றவர்களை என்னிலும் மேன்மையுள்ளவர்களாக எண்ணுவேன் (பிலி 2:3)
- ★ நான் முற்கோபமில்லாதவனாயிருந்து உண்மையான வசனத்தை நன்றாகப் பற்றிக் கொண்டு இருப்பேன் (யாக் 1:19)

★ நான் என்னோடுகூட இருக்கிற மற்றவர்களைக் கோபமூட்டாதிருப்பேன் (கலா 2:26)

★ நான் என் உபத்திரவத்திலே கோபத்தை வெளிப் படுத்தாமல் பொறுமையாயிருப்பேன் (ரோம 12:12)

★ நான் எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருப் பேன் (1தெச 5:14)

★ நான் நீதியின் கனியாகிய சமாதானத்தை நடப் பிப்பேன் (யாக் 3:18)

★ நான் அன்பினால் நிறைந்தவனாக மற்றவர் களைத் தாங்குவேன் (எபே 4:3)

★ நான் கோபத்தை வெளிப்படுத்தாமல் தேவ பிள்ளை என்பதை விளங்கப்பண்ணுவேன் (2கொரி 6:3)

★ நான் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே என் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிப்பேன் (யாக் 3:13)

★ கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத் திரனாக நடந்துகொள்வேன (கொலோ 1:11)

**சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடே கூட இருப்பார் (2கொரி 13:11)**

# 6. இச்சையை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுங்கள் (ரோம 13:14)*

- ★ நான் தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால், இச்சை என்னை மேற்கொள்ளாது (ரோம 6:14)
- ★ நான் மாம்ச இச்சைகளை விட்டு விலகி, நல்நடக்கை யுள்ளவனாய் நடந்து கொள்வேன் (1பேது 2:11)
- ★ நான் இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்த இச்சைகளுக்குத் தப்புவேன் (2பேது 2:20)
- ★ நான் என் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சை களையும் சிலுவையில் அறைந்திருக்கிறேன் (கலா 5:24)
- ★ நான் ஆவிக்கேற்றபடி நடந்து மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருப்பேன் (கலா 5:16)
- ★ நான் பரிசுத்தமுள்ளவனும் பிழையற்றவனுமாகக் கிறிஸ்துவுக்கு முன்பாக நிற்பேன் (எபே 5:27)

- ★ நான் இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, இயேசுகிறிஸ்துவின் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாயிருக்கிறேன் (2பேது 1:4)
- ★ நான் என் மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, என்னைச் சுத்திகரித்துக் கொள்வேன் (2கொரி 7:1)
- ★ நான் மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழையமனுஷனை களைந்துபோட்டு, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்கிறேன் (எபே 4:22-24)
- ★ வழுவாதபடி என்னைக் காக்கவும், தமது மகிமை யுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே என்னை மாசற்றவனாய் நிறுத்தவும் இயேசுகிறிஸ்து வல்லமை யுள்ளவராயிருக்கிறார் (யூதா 1:24)

**தேவனை அறியாத அஞ்ஞானிகளைப்போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து... (1தெச 4:4,5)**

# 7. பெருமையை மேற்கொள்ளுங்கள்

*தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார்*
*(1பேது 5:5)*

★ நான் இயேசுகிறிஸ்துவினிமடமிருந்து அதமதிக மான கிருபையைப் பெற்றுக்கொள்ளும்படி தாழ்மையாய் நடந்துகொள்வேன் (யாக் 4:4)

★ நான் ஒன்றையும் வீண் பெருமையோடு செய் யாமல், மனத்தாழ்மையினாலே மற்றவர்களை மேன்மையுள்ளவர்களாக எண்ணுவேன் (பிலி 2:3)

★

★ என் வாழ்வின் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின (2கொரி 5:17)

★ நான் இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக தாழ்மை யாய் நடந்துகொள்ளுவேன்; அவர் என்னை உயர்த்துவார் (யாக் 4:10)

★ கிறிஸ்துவினுடைய வசனம் எனக்குள்ளே தரித் திருக்கிறது (1யோவா 3:9)

★ நான் விழுந்துபோவதில்லை; இயேசுகிறிஸ்து தமது கையினால் என்னைத் தாங்குகிறார் (சங் 37:24)

- ★ பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியினாலேயே ஆகும் (சக 4:6)

- ★ நான் என்னைப் பாவத்திற்கு மரித்தவனாகவும், இயேசுகிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறவனாகவும் எண்ணுகிறேன் (ரோம 6:11)

- ★ நான் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன் (கலா 6:14)

- ★ நான் இயேசுகிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன்; இயேசுவே எனக்குள் பிழைத்திருக்கிறார் (கலா 2:20)

- ★ என் சரீரமானது நான் இயேசுவாலே பெற்றும், என்னில் தங்கியும் இருக்கிற பரிசுத்தஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது (1கொரி 6:19)

**தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2கொரி 10:5)**

## 8. தாழ்வு மனப்பான்மையை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? (சங் 118:6)*

★ இயேசுவே என்னுடைய ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருக்கிறார் (1கொரி 1:31)

★ நான் இயேசுவை நம்பியிருக்கிறேன்; அவரது கிருபை என்னை சூழ்ந்துகொள்ளும் (சங் 32:10)

★ இயேசுகிறிஸ்து மகிமையின் நம்பிக்கையாக எனக்குள்ளே வாசமாயிருக்கிறார் (கொலோ 1:27)

★ இயேசுவே என் வெளிச்சமும், என் இரட்சிப்புமானவர்... (சங் 27:1)

★ என்னிலிருக்கிற இயேசுகிறிஸ்து எல்லாரிலும் பெரியவர் (1யோவா 4:4)

★ என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்துமுடிப்பேன் (பிலி 4:13)

★ நான் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங் 1:3)

★ இயேசுகிறிஸ்துவே என்னை வெற்றி சிறக்கப் பண்ணுகிறவர் (2கொரி 2:14)

★ நான் இயேசுகிறிஸ்துவாலே ஜெயங்கொள்கிற வனாயிருக்கிறேன் (ரோம 8:17)

★ இயேசுகிறிஸ்து என்னோடு இருக்கிறபடியால் நான் பராக்கிரமசாலி (நியா 6:12)

★ நான் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை (சங் 22:5)

★ இயேசுகிறிஸ்து என் குறைவையெல்லாம் நிறை வாக்குவார் (பிலி 4:19)

★ இயேசுகிறிஸ்து என்னைக் கீழாக்காமல் மேலாக் குவார் (உபா 28:14)

★ இயேசுகிறிஸ்து என்னை சிறந்திருக்கும்படிச் செய்வார் (உபா 26:19)

★ இயேசுவே என்னை விசாரிக்கிறவர் (1பேது 5:7)

★ நான் நம்புகிறது இயேசுவாலே வரும் (சங் 62:5)

**கர்த்தர்: இதோ, நான் உங்கள் பட்சத்திலிருந்து, உங்களைக் கண்ணோக்குவேன் (எசேக் 36:9)**

# ௯. அடிமைத்தனத்தை மேற்கொள்ளுங்கள்

*திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள் (ரோம 8:15)*

- ★ இருளின் அதிகாரத்தினின்று இயேசு என்னை விடுதலையாக்கியிருக்கிறார் (கொலோ 1:13)
- ★ நான் பெற்ற அபிஷேகத்தினால் என் அடிமைத் தனத்தின் நுகம் முறிந்துபோம் (ஏசா 10:27)
- ★ இயேசு என்னை அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டார் (மீகா 6:4)
- ★ நான் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு இயேசுவுக்கு அடிமையாயிருக்கிறேன் (ரோம 6:22)
- ★ இயேசு என் துக்கத்தையும், என் தத்தளிப்பையும், நான் அடிமையாக்கப்பட்டிருந்த கடினமான என் அடிமைத்தனத்தையும் நீக்கி என்னை இளைப் பாறப்பண்ணுவார் (எசா 14:3)

★ இயேசு என்னை அடிமைத்தனத்திற்கு நீங்கலாக்கி தமது பிள்ளையாக சேர்த்துக் கொண்டார் (யாத் 6:6)

★ இயேசு என்னை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும்படிக்கு தம்முடைய மரணத்தினாலே பிசாசானவனை அழித்தார் (எபி 2:14)

★ சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ள இயேசு எனக்கு அதிகாரங் கொடுத்திருக்கிறார் (லூக் 10:19)

★ நான் இயேசுவின் பிள்ளையாயிருப்பதினால், அவரது சுதந்தரருமாயிருக்கிறேன் (ரோம 8:17)

★ நான் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறேன் (ரோம 8:15)

★ நான் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருப்பேன் (கலா 5:1)

**நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார் (2கொரி 6:18)**

# 10. சத்துருவை மேற்கொள்ளுங்கள்

*ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார் (நீதி 16:7)*

★ என் சத்துருக்களை என் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் (ஆதி 14:20)

★ கர்த்தர் என் சத்துருக்களுக்குச் சத்துருவாயும், என் விரோதிகளுக்கு விரோதியாயும் இருப்பார் (யாத் 23:22)

★ என் தேவனாகிய கர்த்தர் என்னுடைய சத்துருக் களையெல்லாம் விலக்கி, என்னை இளைப்பாறப் பண்ணுவார் (உபா 25:19)

★ இயேசுவே, நீர் என் வழக்காளிகளோடே வழக் காடி எனக்கு ஜெயத்தைத் தருவீர்... (சங் 35:1)

★ என்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கப்பட்டுப் போவார்கள்; என்னோடே யுத்தம்பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் போவார்கள் (ஏசா 41:11,12)

- ★ இயேசு என்னைத் துன்பப்படுத்துகிறவர்களோடே எதிர்த்து நின்று என்னைத் தப்புவிப்பார் (சங் 35:3)
- ★ இயேசு எனக்குத் தீங்கு செய்ய நினைக்கிறவர்களை வெட்கமடையச் செய்வார் (சங் 35:4)
- ★ இயேசு என் சத்துருக்களுக்கு முன்பாக எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துவார் (சங் 23:5)
- ★ எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்தவொரு ஆயுதமும் வாய்க்காதே போம் (ஏசா 54:47)
- ★ இயேசு என்னைப் பொல்லாதவர்களின் கைக்குத் தப்புவித்து, பலவான்களின் கைக்கு நீங்கலாக்கி விடுவிப்பார் (எரே 15:21)
- ★ இன்று கண்ட என் சத்துருவை இனி என்றுமே நான் காண்பதில்லை (யாத் 14:13)
- ★ எவர்கள் எனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் என் பட்சத்தில் வருவார்கள் (ஏசா 54:15)
- ★ என்னை ஒடுக்கினவர்களும், என்னை அசட்டை பண்ணினவர்களும் என் காலடியில் பணியும்படி இயேசு செய்வார் (ஏசா 61:14)

**உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய் (சங் 41:12)**

# 11. தோல்வியை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தாவே... ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள் (1நாளா 29:11)*

★ இயேசுகிறிஸ்துவினாலே எனக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (1கொரி 15:57)

★ என்னில் அன்புகூரும் இயேசுவாலே நான் ஜெயங் கொள்வேன் (ரோம 8:37)

★ இயேசு எனக்கு துணை நிற்கிறார் (ஏசா 40:7)

★ இயேசுவால் எனக்கு ஜெயம் வரும் (நீதி 21:31)

★ இயேசு என்னை வெற்றி சிறக்கப்பண்ணுவார் (2கொரி 2:14)

★ இயேசு எனக்கு வெற்றியைக் கட்டளையிடுவார் (நியா 11:36)

★ இயேசுவே, எனக்கு ஜெயத்தைத் தருகிறவர் (சங் 104:10)

★ நான் இயேசுகிறிஸ்துவால் தோல்வியை எளிதாய் ஜெயிப்பேன் (எண் 13:30)

★ சிலுவையின்மேல் வெற்றிசிறந்த இயேசுகிறிஸ்து வால் நான் எல்லாவற்றிலும் ஜெயமெடுப்பேன் (கொலோ 2:15)

★ நான் இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதால் இந்த உலகத்தை ஜெயிப்பேன் (1யோவா 5:5)

★ நான் தோல்வியை மேற்கொள்வேன்; ஏனெனில் இயேசு உலகத்தை ஜெயித்தார் (யோவா 16:33)

★ நான் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலும் என் சாட்சியின் வசனத்தினாலும் சாத்தானை ஜெயிப் பேன் (வெளி 12:11)

★ நான் தீமையை நன்மையினாலே வெல்வேன் (ரோம 12:21)

★ இயேசு என்மேல் பிரியமாயிருப்பதினால் சத்துரு என்னை ஜெயங்கொள்ள முடியாது (சங் 41:11)

★ இயேசுகிறிஸ்துவின் வசனத்தால் பொல்லாங் கனை ஜெயிப்பேன் (1யோவா 2:14)

★ நான் ஜெயிக்கும்படிக்கு இயேசுகிறிஸ்து என்னைப் பலப்படுத்தி எனக்குச் சகாயம்பண்ணுவார் (ஏசா 41:10)

**உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள் (யோவா 16:33)**

# 12. பயத்தை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார்; நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? (சங் 118:6)*

- நான் பயப்படுகிறதற்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணும் புத்திர சுவிகாரத்தின் ஆவியைப் பெற்றிருக்கிறேன் (ரோம 8:15)
- இயேசு எனக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவி யையே கொடுத்திருக்கிறார் (2தீமோ 1:7)
- இயேசுவே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன் (ஏசா 12:2)
- நான் பயமில்லாதிருப்பேன், திகிலுக்குத் தூரமா வேன், அது என்னை அணுகுவதில்லை (ஏசா 54:14)
- நான் பயப்படாதிருப்பேன்; இயேசு என்னோடு கூட இருக்கிறார் (ஏசா 43:5)

★ நான் பயப்படும் நாளில் இயேசுகிறிஸ்துவை நம்புவேன் (சங் 56:3)

★ நான் ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதி யாயிருப்பேன் (நீதி 1:33)

★ இயேசு எனக்குக் கேடகமும், மகாபெரிய பலனு மாயிருக்கிறார் (ஆதி 15:1)

★ நான் இயேசுவை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன் (சங் 56:4)

★ நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந் தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; இயேசு என்னோடேகூட இருக்கிறார் (சங் 23:4)

★ நான் இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பேன் (சங் 91:5,6)

★ நான் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லுவேன் (எபி 13:6)

**மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் (எபி 10:35)**

# 13. கவலையை மேற்கொள்ளுங்கள்

*கவலைப்படாதிருங்கள்*
*(மத் 6:30)*

★ நான் கவலையற்றவனாயிருக்க வேண்டும் என்பதே என்னைக் குறித்து இயேசுகிறிஸ்துவின் விருப்பமாயிருக்கிறது (1கொரி 7:32)

★ இயேசுகிறிஸ்து என்னை விசாரிக்கிறவராக இருக்கிறபடியால், என் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிட்டேன் (1பேது 5:7)

★ இயேசுவின்மேல் என் பாரத்தை வைத்து விட்டேன், அவர் என்னை ஆதரிப்பார்; என்னை ஒருபோதும் தள்ளாடவொட்டார் (சங் 55:22)

★ நான் கவலையில்லாமல் என் இயேசுவைப் பற்றிக்கொண்டிருப்பேன் (1கொரி 7:35)

★ நான் என்னத்தை உண்பேன், என்னத்தைக் குடிப்பேன் என்று என் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்பேன் என்று என் சரீரத்திற்காகவும் கவலைப் படாதிருப்பேன் (மத் 6:25)

★ நான் நாளைக்காகக் கவலைப்படமாட்டேன்; நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும் (மத் 6:34)

★ நான் மற்றவர்களைப் போல ஒவ்வொரு காரியத்தையும் குறித்து கவலைப்பட்டு கலங்கமாட்டேன் (லூக் 10:41)

★ நான் கவலைப்படமாட்டேன்; இயேசுகிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என்னுடைய பெலன் (நெகே 8:10)

★ நான் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து என் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் இயேசுவுக்குத் தெரியப்படுத்துவேன் (பிலி 4:6)

★ கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிக்கிறவராக இருக்கிறபடியால் நான் கவலைப்படமாட்டேன் (சங் 138:8)

**மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள் (எபி 10:35)**

# 14. சோர்வை மேற்கொள்ளுங்கள்

*சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார் (ஏசா 40:29)*

★ நான் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணுவேன் (லூக் 18:1)

★ நான் இளைப்புள்ளவனாய் என் ஆத்துமாவில் சோர்ந்துபோகாமல் இயேசுகிறிஸ்துவையே நினைத்துக்கொள்ளுவேன் (எபி 12:3)

★ நான் உபத்திரவங்களினால் சோர்ந்து போகாதிருப்பது எனக்கு மகிமையாயிருக்கிறது (எபே 3:13)

★ நான் சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுவேன் (ரோம 2:7)

★ ஆபத்துக்காலத்தில் நான் சோர்ந்து போகமாட்டேன் (நீதி 24:10)

★ நான் இயேசுவால் கடிந்துகொள்ளப்பட்டாலும் சோர்ந்துபோகமாட்டேன் (எபி 12:5)

★ என் ஆத்துமா சோர்ந்துபோகும்பொழுது நான் என் இயேசுவைத் தேடுவேன் (உன் 5:6)

★ எனக்கு விரோதமாகப் போராடும் சத்துருவினிமித்தம் நான் சோர்ந்துபோகமாட்டேன் (மாற் 9:18)

★ அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவத்தினால் நான் சோர்ந்துபோவதில்லை (2கொரி 3:16,17)

★ இயேசுவுக்குக் காத்திருக்கிற நான் புது பெலன் அடைந்து, கழுகுகளைப் போல செட்டைகளை அடித்து எழும்புவேன்; நான் சோர்ந்துபோகமாட்டேன் (ஏசா 40:31)

★ இயேசு எனக்குத் துணையாக நின்று என்னைப் பெலப்படுத்துகிறார் (2தீமோ 4:17)

★ நான் இயேசுகிறிஸ்துவினாலே சோர்ந்து போகிறதில்லை (2கொரி 4:16)

**நாங்கள் இரக்கம் பெற்றிருப்பதால் சோர்ந்து போகிறதில்லை (2கொரி 4:1)**

# 15. துக்கத்தை மேற்கொள்ளுங்கள்

*உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோவா 16:20)*

- ★ இயேசு எனக்கு நித்திய வெளிச்சமாயிருப்பார்; என் துக்கநாட்கள் முடிந்துபோம் (ஏசா 60:20)
- ★ ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல இயேசு என்னைத் தேற்றுவார் (ஏசா 66:13)
- ★ நான் எப்பொழுதும் இயேசுவுக்குள் மகிழ்ச்சி யாயிருப்பேன் (ஆப 3:18)
- ★ இயேசு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றுவார் (யோவா 16:20)
- ★ துக்கப்படுகிற எனக்கு இயேசு ஆறுதல் அளிப்பார் (ஏசா 57:19)
- ★ நான் துக்கத்தின்மேல் துக்கம் அடையாதபடிக்கு இயேசு எனக்கு இரங்குவார் (பிலி 2:27)
- ★ என் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிருக்கும்படிக்கு இயேசு எனக்கு அதிகாரமளித்திருக்கிறார் (பிர 5:19)

★ இயேசு என் துக்கத்தையும், என் தத்தளிப்பையும், என் அடிமைத்தனத்தையும் நீக்கி என்னை இளைப்பாறப்பண்ணுவார் (ஏசா 14:3)

★ இயேசு என் துக்கத்தை சந்தோஷமாக மாற்றி, என் சஞ்சலம் நீங்க என்னைச் சந்தோஷப் படுத்துவார் (எரே 31:13)

★ இயேசு என்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்; அழுகையின் சத்தமும், கூக்குரலின் சத்தமும் இனி என்னில் கேட்கப்படுவதில்லை (ஏசா 65:19)

★ நான் துக்கப்படுகிறவன் என்னப்பட்டாலும், இயேசுவுக்குள் எப்பொழுதும் சந்தோஷமா யிருப்பேன் (2கொரி 6:10)

★ என் வெட்கத்துக்குப் பதிலாக இரண்டத்தனை யாய்ப் பலன் வரும்; இலச்சைக்குப் பதிலாக என் பாகத்தில் சந்தோஷப்படுவேன் (ஏசா 61:7)

★ இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிற என்னை இயேசு சந்தோஷப்படுத்துவார் (1பேது 1:6)

**நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை (1தெச 4:13)**

# 16. கலக்கத்தை மேற்கொள்ளுங்கள்

*உங்கள் இருதயம் கலங்காமலும் பயப் படாமலும் இருப்பதாக(யோவா 14:27)*

★ என் ஆத்துமாவே, நீ கலங்காதே; நீ எனக்குள் தியங்காதே, இயேசுவையே நோக்கிக் காத்திரு (சங் 43:5)

★ என் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருக்கும்... (யோவா 14:27)

★ நான் மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாமலும், அவர்கள் தூஷணங்களால் கலங்காமலும் இருப்பேன் (ஏசா 51:7)

★ மற்றவர்களின் பயமுறுத்துதலுக்கு நான் பயப் படாமலும் கலங்காமலும் இருந்து இயேசுவை என் இருதயத்தில் பரிசுத்தம் பண்ணுவேன் (1பேது 3:14,15)

★ நான் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பேன் (ஏசா 45:17)

★ நான் கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறது இல்லை (2கொரி 4:8)

★ இயேசு எனக்குச் சமாதானம் அருளியிருக்க என்னைக் கலங்கப்பண்ண ஒருவனாலும் முடியாது (யோபு 34:30)

★ நான் கலக்கமடையாதபடிக்கு மற்றவர்கள் முகத்துக்கு அஞ்சாதிருப்பேன் (எரே 1:17)

★ நான் உலகக் காரியங்களைக் குறித்து கவலைப் பட்டு கலங்கமாட்டேன் (லூக் 10:41)

★ எனக்கு விரோதமாக எழும்பும் சத்துருவின் வல்லமையைக் கண்டு நான் கலங்கமாட்டேன் (உபா 20:3)

★ என் தேவனாகிய இயேசுதாமே எனக்காக யுத்தம்பண்ணுவார் (உபா 3:22)

★ என்னைக் கலக்குகிற மனிதனுடைய கிரியைகள் இயேசுவின் நாமத்தில் தறிப்புண்டுபோகும் (கலா 5:12)

**சமாதானத்தின் கர்த்தர்தாமே எப்பொழுதும் சகலவிதத்திலும் உங்களுக்குச் சமாதானத்தைத் தந்தருளுவாராக (2தெச 3:16)**

# 17. பெலவீனத்தை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர்... கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் (சங் 27:1)*

- ★ ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என் பெலன் (ஆப 3:19)
- ★ இயேசு என்னைப் பலத்தால் இடைகட்டி, என் வழியைச் செவ்வைப்படுத்துகிறார் (சங் 18:32)
- ★ இயேசு எனக்குப் பலமுள்ள ஆவியைக் கொடுத் திருக்கிறார் (2தீமோ 1:7)
- ★ நான் இயேசுவுக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே என்னுடைய பெலன் (நெகே 8:10)
- ★ நான் இயேசுவிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவேன் (எபே 6:10)
- ★ இயேசுகிறிஸ்துவின் ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படுவேன் (எபே 3:16)

★ என்னைப் பெலப்படுத்தும் இயேசு கிறிஸ்துவி னாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலி 4:13)

★ இயேசு எனக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையு மானவர் (சங் 46:1)

★ இயேசுகிறிஸ்துவின் கிருபை எனக்குப்போதும், பலவீனத்திலே அவருடைய பலம் எனக்குள் பூரணமாய் விளங்கும் (2கொரி 12:9)

★ இயேசுகிறிஸ்துவின்மேல் நான் வைக்கும் விசு வாசத்தினாலே என்னுடைய பெலவீனத்திலே பெலன்கொள்வேன் (எபி 11:34)

★ நான் பராக்கிரமசாலி; கர்த்தர் என்னோடுகூட இருக்கிறார் (நியா 6:12)

★ இயேசுகிறிஸ்துதாமே என்னுடைய பெலவீனங் களை ஏற்றுக்கொண்டு, என்னுடைய நோய் களைச் சுமந்து தீர்த்தார் (மத் 8:17)

**நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன் (2கொரி 12:10)**

# 18. வியாதியை மேற்கொள்ளுங்கள்

*நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்*
*(யாத் 15:26)*

★ நான் இயேசுகிறிஸ்துவின் தழும்புகளால் குணமாகிறேன் (1பேது 2:24)

★ இயேசுகிறிஸ்துதாமே என் பெலவீனங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு என் நோய்களைச் சுமந்துவிட்டார் (மத் 8:17)

★ இயேசு பிணியாளிகள் எல்லாரையும் சுகமாக்கினார்; என்னையும் சுகமாக்குவார் (மத் 8:16)

★ இயேசு என் சரீரத்திலிருக்கிற வியாதியை என்னிலிருந்து விலக்குவார் (யாத் 23:25)

★ இயேசுவே, உம்மிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினதுபோல என்னையும் குணமாக்குகிறது (லூக் 6:19)

★ வாதை என் கூடாரத்தை அணுகாது; பொல்லாப்பு என்னை அணுகாது (சங் 91:10)

★ இயேசு தமது வசனத்தை அனுப்பி என்னைக் குணமாக்கி, என்னை அழிவுக்கு தப்புவிக்கிறார் (சங் 107:20)

★ இயேசுவே, நீர் என் கண்ணீரைக் கண்டீர்; என்னைக் குணமாக்குவீர் (2இரா 20:5)

★ இயேசுவே, நீர் என் வியாதிப்படுக்கை முழு வதையும் மாற்றிப்போடுவீர் (சங் 41:3)

★ என் வேதனை நீங்கி ஆரோக்கியமடைவதை நான் என் சரீரத்தில் உணருவேன் (மாற் 5:29)

★ நான் சமாதானத்தோடே போய் என் வேதனை நீங்கி சுகமாயிருப்பேன் (மாற் 5:34)

★ நான் குணமானதற்காக இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்துவேன் (லூக் 17:16)

★ இயேசு தமது வசனத்தை எனக்குள் அனுப்பி என்னைக் குணமாக்கி, என்னை அழிவுக்குத் தப்புவிக்கிறார் (சங் 107:20)

**இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன் (சங் 107:20)**

# 19. ஆபத்தை மேற்கொள்ளுங்கள்

*பொல்லாப்பு உனக்கு நேரிடாது*
*(சங் 91:10)*

- ★ இயேசு என் அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் எனக்கு அநுகூலமான துணையுமானவர் (சங் 46:1)
- ★ ஆபத்துக்காலத்தில் இயேசு என் ஜெபத்தைக் கேட்பார் (சங் 20:1)
- ★ ஆபத்துநாளில் என் இயேசுவைத் தேடுவேன் (சங் 77:2)
- ★ ஆபத்துநாளில் இயேசு எனக்கு ஆதரவாயிருப்பார் (சங் 18:18)
- ★ ஆபத்தில் இயேசு என்னோடிருந்து, என்னைத் தப்புவித்து என்னைக் கனப்படுத்துவார் (சங் 91:15)
- ★ ஆபத்துக்காலத்தில் நான் சோர்ந்து போகாதிருப்பேன் (நீதி 24:10)
- ★ நான் ஆபத்துக்காலத்திலே வெட்கப்பட்டுப் போவதில்லை (சங் 37:19)

★ ஆபத்துக்காலத்தில் இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன்; அவர் என்னை விடுவிப்பார் (சங் 50:15)

★ நான் என் ஆபத்திலே இயேசுவை நோக்கிக் கூப்பிடுவேன், அவர் என் இக்கட்டுகளிலிருந்து என்னை விடுவிப்பார் (சங் 107:6)

★ ஆபத்துக்காலத்தில் என்னைத் தப்புவிப்பதற்கு இயேசு என்னோடிருக்கிறார் (எரே 15:20)

★ தீங்குநாளில் இயேசு என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்துவைப்பார் (சங் 27:5)

★ இயேசு என்னோடே இருந்து, நான் போகிற இடத்திலெல்லாம் என்னைக் காப்பார் (ஆதி 28:15)

★ இயேசுவே, உம் சமுகம் எனக்கு முன்பாகச் செல்லும் (யாத் 33:14)

★ இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பேன் (சங் 91:6)

★ இயேசு என்னை எல்லாத் தீங்கிற்கும் விலக்கிக் காப்பார்; என் ஆத்துமாவைக் காப்பார் (சங் 121:7)

**ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன் (சங் 91:15)**

# ௨௦. குறைவை மேற்கொள்ளுங்கள்

*கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10)*

- ★ நிறைவான இயேசுவானவர் எனக்குள் இருப்ப தால் என் குறைவுகள் யாவும் ஒழிந்துபோகும் (1கொரி 13:10)
- ★ என் இயேசு தம்முடைய மகிமையுள்ள ஐசுவரி யத்தின்படி என் குறைவையெல்லாம் நிறை வாக்குவார் (பிலி 4:19)
- ★ இயேசுகிறிஸ்துவைத் தேடுகிற எனக்கு ஒரு நன்மையுங் குறைவுபடாது (சங் 34:10)
- ★ யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிற இயேசு என் குறைவுகளையெல்லாம் நீக்கிவிடுவார் (யாக் 1:5)
- ★ மற்றவர்களுடைய குறைவுகளில் நான் உதவி செய்வேன் (1யோவா 3:17)
- ★ இயேசு என் கைகளின் கிரியையை ஆசீர்வதிப் பார் (யோபு 1:10)

★ திராட்சரசங் குறைவுபட்டபோது அற்புதம் செய்த இயேசு என் குறைவுகளையும் நிறைவாக்குவார் (யோவா 2:8)

★ நான் இயேசுவால் ஒன்றிலும் குறைவுள்ளவனா யிராமல் பூரணனாயும், நிறைவுள்ளவனாயும் இருப்பேன் (யாக் 1:4,5)

★ இயேசுகிறிஸ்துவின் ஆசீர்வாதம் என்மேல் இருக்கும்; நான் குறைவுபடுவதில்லை (சங் 3:8)

★ இயேசுகிறிஸ்து என்னை அநேகருக்குக் கடன் கொடுப்பவனாக மாற்றுவார் (உபா 15:6)

★ இயேசுகிறிஸ்து என் அப்பத்தையும் என் தண்ணீ ரையும் ஆசீர்வதிப்பார் (யாத் 23:25)

★ இயேசுகிறிஸ்து நான் ஆயிரமடங்கு அதிமா கும்படி என்னை ஆசீர்வதிப்பார் (உபா 1:11)

★ இயேசுகிறிஸ்து என் மேய்ப்பராயிருக்கிறபடி யால் நான் தாழ்ச்சியடைய மாட்டேன் (சங் 23:1)

**பூமி தன் கனியைத் தரும்; நீங்கள் திருப்தியாகச் சாப்பிட்டு, அதில் சுகமாய்க் குடியிருப்பீர்கள் (லேவி 25:19)**

# விசுவாச வசனங்கள்

*இயேசுவை விசுவாசி*
*(அப் 16:31)*

★ நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் (யோவா 11:40)

★ விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது (எபி 11:1)

★ நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் (மத் 21:22)

★ விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (கலா 3:11)

★ நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம் (1யோவா 6:4)

★ விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் (மாற் 9:23)

**இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான் (1யோவா 5:1)**

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

*லூக்கா 11:9*

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

★ ..................................................................

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

*லூக்கா 11:9*

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

★ ................................................................

# விசேஷித்த ஜெபக்குறிப்புகள்

*லூக்கா 11:9*

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

★ ..........................................................

# முழங்கால் யுத்தம்

ஜெபப்புத்தகங்கள் மற்றும்

பிற வெளியீடுகள் பற்றிய

முழு விவரங்களை அறிந்துகொள்ள

அணுக வேண்டிய முகவரி...

**முழங்கால் யுத்தம்**

**46/AA, சாந்தி நகர் மேற்கு, 3வது தெரு,**

**ஓசூர் - 635 109.**

**செல்: 70944 99959/ 70944 99969**

**Email:**

muzhangalyuttham100@gmail.com

muzhangalyutthambookministries@gmail.com

# Muzhangal Yuttham

## Life of Victory

ஒருவருடைய வெற்றி அவருடைய வாழ்வில்
அடைந்த உயர்ந்த நிலையைப் பொறுத்து
அளவிடப்படுவதில்லை; அது அவர் வாழ்வில்
தோன்றிய ஒவ்வொரு தடைகளையும்
எப்படி மேற்கொண்டார் என்பதைப்
பொறுத்தே அளவிடப்படுகிறது.

தேசத்தின் மறுரூப பார்வை

ஜெபத்தினால் மறுரூபம்

**MUZHANGAL YUTTHAM**
INTERCESSORY PRAYER MINISTRIES
46/AA, SHANTHI NAGAR (WEST)
HOSUR - 635 109. Tel : 70 944 999 59 / 70 944 999 6
Email : muzhangalyutthambookministries@gmail.com
muzhangalyuttham100@gmail.com